**தேயிலை சக்தி நிதியம் - 2021**

தேயிலை சக்தி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் மீது இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களினாலும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்குமுடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லல் வேண்டும். அந்த அதிகார சட்டத்தின் பிரிவு 16(2) பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் ஒன்று தொடர்பான வருடாந்த நிதிக் கூற்றுக்கள், விதிகளின் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதி ஒன்றுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் குறிப்பிட்ட காலத்தினுள் தயாரிப்பத்தல் மேற்கொள்ளப்படுகின்றது என உறுதிப்படுத்தல் வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு உரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும். அவ்வாறாயினும், 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 மற்றும் 2004 பெப்ரவரி 24 திகதிய 01/2004 இலக்கம் கொண்ட திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம், கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கைகள் இந்த அறிக்கை திகதி வரையும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லல்**

நிதியத்தின் அலுவல்கள் தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்குகள், நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று மற்றும் நிலையான வைப்புப் பதிவேடு ஒன்று நாளதுவரையாக பேணப்பட்டு வந்திருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலவுகை**

நிதியத்தினால் இறுதியாக கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விபரம் | பெறுமதி (ரூபா) |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 320,784,701 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 322,856,753 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **643,641,454** |

**பொறுப்புக்கள்**

| | |
|---|---|
| உரிமை மூலதனம் | (142,264,604) |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 461,964,905 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 323,941,153 |
| **மொத்தப் பொறுப்புகள்** | **643,641,454** |

**2.3 நிலுவை வருமானங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை சக்தி நிதியம் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்ததுடன், நிதியத்தின் உரிமை மூலதனம் முறையாக குறைந்திருந்தது. அதன்படி, 2012 ஆண்டின் போது ரூபா.124.058 மில்லியன் தொகைக்கான உரிமை மூலதனம் 2015 ஆண்டின் போது ரூபா.111.65 மில்லியனிற்கான மறை உரிமை மூலதன நிலைமை ஒன்றினைக் காட்டியது. இந்த நிலைமையின் காரணமாக 2016 ஜூலை 13 திகதிய அமப/16/1224/726/015-I மற்றும் 2016 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய அமப/16/1427/726/015-II ஆம் இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தேயிலை சக்தி நிதியத்தின் அலுவல்கள் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளருக்கு சாட்டப்பட்டு நிதியத்தை மீள்கட்டமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்கல் தொடர்பாக குத்தகையாளர்களுடன் அணுகியிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஹொரண உரக் களஞ்சியம், மாவரல தோட்டம் மற்றும் 12 தொழிற்சாலைகளில் இருந்து 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை குத்தகைத் தொகை ரூபா.127,148,022 ஆகும். | பல சந்தர்ப்பங்களில், வரி நிர்வாகத்தை வாங்குபவர்களுக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டு, உரிய தொகையை செலுத்துமாறு நிறுவனத்திற்கு வாய்மொழியாக அழைப்பு விடுக்கப்பட்டு, பல்வேறு காரணங்களை கூறி உரிய தொகையை செலுத்த தவறிவிட்டனர். இதன்படி, வலஹந்துவ மற்றும் மகாவலி தொழிற்சாலைகள் மீளப் பெறப்பட்டு புதிய | நிலுவைத் தவணைகளை அறவீடு செய்வதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குத்தகை/நிர்வாகம் கொள்வனவு செய்பவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், நிலுவையிலுள்ள குத்தகை/நிர்வாகக் கட்டணங்களுக்கு உரிய கொள்வனவுதாரர்களின் பாதுகாப்பு வைப்புத் தொகைகள் தக்கவைக்கப்பட்டுள்ளன. தற்போது, வரி/நிர்வாகம் வாங்குபவர்களுக்கு, அனைத்து நிலுவைத் தொகையும் ஒரு மாதத்திற்குள் செலுத்தப்பட வேண்டும் அல்லது தொழிற்சாலையை மீட்டு, நிலுவைத் தொகையை வசூலிக்க சட்ட நடவடிக்கைகள் தொடங்கப்படும் என எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | |
| (ii) | குத்தகை உடன்படிக்கையின் படி அறவிடப்பட வேண்டிய மாதாந்த குத்தகை அடுத்த மாதம் முதலாம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்படாவிடின் செலவிடப்படும் ஒவ்வொரு நாட்களுக்காகவும் குத்தகை தொகையின் 1 சதவீத தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பதால் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குத்தகை தொகையை செலுத்தாமைக்கான தாமதக் கட்டணமாக ரூபா.740,132,354 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததென அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒரு நாளைக்கு 1% தாமதக் கட்டணத்தின் மதிப்பின் அடிப்படையில் இந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது, மேலும் வரி/முகாமைத்துவ கொள்வனவாளர்கள் அதைத் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, அதைத் தொடர்ந்து வசூலிப்பது நடைமுறைக்கு மாறானது. தேயிலை சக்தி நிதியத்தின் பிரச்சினைகள் தொடர்பாக முன்மொழிவுகளை உருவாக்க நியமிக்கப்பட்ட குழு அதை பரிசீலனை செய்து ஆலோசனைகளை வழங்கும். அதன்படி, மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தாமதக் கட்டணம் அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | குத்தகை ஒப்பந்தத்தின் பிரிவு (07) இன் படி, உற்பத்தி நடவடிக்கைகள் தொடங்கும் போது, குத்தகைதாரர் ஒவ்வொரு தொழிற்சாலையின் மாதாந்திர பச்சை கொழுந்தின் இயலுமைக்கு ஏற்ற மதிப்பின் அடிப்படையில் தேயிலை சக்தி நிதியின் பெயரில் காப்பீட்டுக் கொள்கையைப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் இந்த | குத்தகை/முகாமைத்துவ கொள்வனவாளர்கள் தொழிற்சாலையின் சொத்து மதிப்புக்கு எதிராக காப்பீடு செய்துள்ளனர். சம்பந்தப்பட்ட காப்பீட்டு கொள்கையின் பிரதி தேயிலை சக்தி நிதிக்கு வழங்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் நிலுவைக் குத்தகைத் தொகையை அறவீடு செய்ய வேண்டும். |

தொழிற்சாலைகள் கணக்காய்வு திகதி வரை அவ்வாறு செய்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

-

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) கொத்மலை தேயிலை சக்தி தொழிற்சாலை**<br>2017 சனவரி 30 ஆந் திகதி முதல் 2027 சனவரி 29 ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதிக்காக தேயிலை சக்தி தொழிற்சாலையின் முகாமைத்துவம் நுகேகொட ரயிகம் பிளான்டேஷன் தனியார் கம்பனிக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் கையளிக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) உடன்படிக்கைக் காலம் ஆரம்பித்த திகதியிலிருந்து முகாமைத்துவக் கட்டணத்தை செலுத்த இரண்டு மாத சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்ததுடன், மாதமொன்றுக்கு செலுத்த வேண்டிய முகாமைத்துவக் கட்டணம் காசாக தாமதிக்கு ஒவ்வொரு நாளுக்கும் 1 சதவீதம் படியான தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு உடன்படிக்கையின் மூலம் இரு தரப்பினரும் இணங்கியிருந்தனர். எவ்வாறான போதிலும், இந்த தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்கிய நாள் முதல் 2022 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய மொத்த தவணை தொகை ரூபா.40,185,000 இல் நிதியத்திற்கு கிடைத்திருந்த தொகை ரூபா.4,617,000 அல்லது 11 சதவீதம் மாத்திரம் ஆகும். குத்தகை பெறுநர் இறுதியாக 2019 யூலை 11 ஆந் திகதி ரூபா.627,000 ஆன குத்தகை வாடகையொன்றினை செலுத்தியிருந்ததுடன், அதன் பின்னர் 02 வருட காலப்பகுதியினுள் எந்தவொரு | உரிய நிலுவைப்பணம் 2022.10.12 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு இதுவரையிலும் இறுதியாக திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செலுத்துவதற்கு தவறினால் உடன்படிக்கையை இரத்துச் செய்து தொழிற்சாலையை மீள சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால் செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைப் பணத்தையும் அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் எழுத்துமூலம் முகாமைத்துவ கொள்வனவாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. | மாதாந்த முகாமைத்துவ கட்டணம் அதற்கடுத்த 10 ஆம் திகதி வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டியதுடன் 02 மாதங்களில் முகாமைத்துவ கட்டணங்களை செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டால் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டு நிலுவைப்பணம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகை தொகையும் செலுத்தப்படவில்லை. அதற்கமைய இந்த தொழிற்சாலைக்காக 2022 யூலை 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலுவை தவணைப்பணம் மற்றும் நிலுவை தாமதக் கட்டணங்கள் ரூபா.322,718,895 ஆக காணப்பட்டது. | | |
| (ii) | இந்த தொழிற்சாலை சிறந்த தரத்திலான பூர்த்தி தேயிலை உற்பத்தி ஒன்று மேற்கொள்ள முடியாத வகையில் இயந்திரங்கள் பெருமளவிலும் சிதைவடைந்த நிலைக்கு உள்ளாகியிருந்தமை, புகை போக்கிகள் இரண்டும் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டமை, கட்டிடத்தினை புனரமைப்பதற்கு பாரிய செலவினம் மேற்கொண்டு இருந்தமையால் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிப்பது தாமதமடைவதற்கு காரணமாக அமைந்திருந்ததாக குத்தகைக்கு எடுத்த தரப்பினரால் குறிப்பிடப்பட்டிருந்தது.<br>தொழிற்சாலை ஆரம்பம் முதல் இதுவரையிலும் தேயிலை உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டிராததுடன் ஆரம்பத்தில் சில மாதங்கள் மாத்திரம் உற்பத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் இதுவரை காலமும் தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>எவ்வாறான போதிலும் தேயிலைச் சபையின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளில் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஜூலை மாதம் வரையிலும் தொழிற்சாலை மூடப்பட்டிருந்ததுடன் தொழிற்சாலை கட்டிடம் சிறந்த நிலையில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. மீண்டும் தேயிலை பரிசோதகர்களினால் 2021 நவம்பர் 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொழிற்சாலை மூடப்பட்டிருந்ததுடன் இயந்திரங்கள் சிறந்த நிலைமையில் இருப்பதாக | தொழிற்சாலையை சுற்றிலும் அமைந்துள்ள 05 தொழிற்சாலைகளின் போட்டித் தன்மையின் அடிப்படையில் தேயிலை கொழுந்துகளை பெற்றுக் கொள்வதில் காணப்படும் சிரமங்களின் மத்தியில் தேயிலை உற்பத்தியை தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாதுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் தொழிற்சாலைகள் உரிய பராமரிப்புடன் பேணிச் செல்லல் மற்றும் உரிய முகாமைத்துவத்தினை மேற்கொள்ளுதல் முகாமைத்துவ கொள்வனவாளரின் பொறுப்பாகும். | சொத்துக்களை பாதுகாப்பதற்கும் பயன்படுத்தாத தொழிற்சாலைகளை ஆக்கபூர்வமாக மற்றுமொரு தரப்பினருக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (iii) | கொத்மலை தேயிலை சக்தி தொழிற்சாலையின் உற்பத்தி இயலளவு மாதாந்தம் பூர்த்தி தேயிலை கிலோ கிராம் 38,000 ஆன அளவில் காணப்பட்டது. தேயிலைச் சபையின் தகவல்களுக்கமைய 2019 அக்டோபர் மாதத்தின் பின்னர் 2021 பிப்ரவரி மாதத்தில் மாத்திரம் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 807 கிலோகிராம் பூர்த்தி தேயிலை உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே அதனை சுற்றிலும் உள்ள 05 தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிதியத்திற்கு சொந்தமான மகாவலி தேயிலை சக்தி தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளும் கருத்திற்கொள்ளக் கூடிய அளவிலான செயன் முன்னேற்றத்துடன் பேணிச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2020 செப்டெம்பர் 15 ஆம் திகதி நுவரேலியா உதவி தேயிலை ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் தொழிற்சாலையின் பதிவினை புதுப்பிக்காது ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் உற்பத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அம்மாதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தேயிலை கொழுந்துக்கு கொழுந்து உரிமையாளர்களுக்கு ரூபா.3,914,019 தொகை செலுத்தவும் நேர்ந்திருந்தது. அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் தேயிலை தொழிற்சாலைகளை பதிவு செய்யாத காரணத்தால் இலங்கை தேயிலை சபையினால் தற்காலிகமாக அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் கட்டணம் செலுத்தி தேயிலை உற்பத்தி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் பொறுப்பு மற்றும் உடன்படிக்கை காலப்பகுதியினுள் உரிய அனைத்து கொடுப்பனவுகளையும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு முகாமைத்துவ கொள்வனவாளரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என உடன்படிக்கையின் பிரகாரம் இரு தரப்பினராலும் இணக்கம் காணப்பட்டுள்ளது. | தேயிலை உற்பத்தி தொடர்பில் விதிக்கப்படும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | மின்சார பட்டியல் கட்டணம் ரூபா.639,803 ஆன தொகையும் குத்தகையாளரினால் இலங்கை மின்சார சபைக்கு | உரிய நிலுவைப் பணத்தை செலுத்துமாறு எழுத்துமூலம் முகாமைத்துவ கொள்வனவாளருக்கு | உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுதல் தொடர்பில் 2 மாதங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்துவதிலிருந்து புறக்கணிக்கப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செயற்படாதவிடின் எதிர்காலத்தில் அதற்குரிய சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்து மின்சாரப் பட்டியல்களை குத்தகையாளரின் வைப்புத் தொகையில் இருந்து அறவிடவேண்டும். |
| (v) | தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெறாமையும் வெளிவாரி தரப்பினருக்கு செலுத்தவேண்டிய நிலுவை பணம் மற்றும் பெருமளவிலான நிலுவை முகாமைத்துவ கட்டணம் காணப்பட்டமையும், தொழிற்சாலையில் உள்ள சொத்துக்கள் சேதமடைந்துள்ள காரணத்தாலும் இந்த தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்கிய நோக்கம் நிறைவேறவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | மேற்படி (ஆ) மூலம் சுட்டி காண்பிக்கப்பட்டுள்ளவாறு குறித்த நிலைமையை சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | தொடர்ச்சியாக குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறினால் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரின் நிலுவைத் தொகை பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) மஹாவலி தேயிலை சக்தி தொழிற்சாலை**

மஹாவலி தேயிலை சக்தி தொழிற்சாலையின் முகாமைத்துவம் 2019 ஆகஸ்ட் 06 ஆம் திகதி முதல் 2029 ஆகஸ்ட் 05 ஆம் திகதி வரையிலும் 10 வருட காலப்பகுதிக்காக மீகஹதன்ன அருண டீ பெக்டரி தனியார் கம்பெனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் தகவல்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | இந்த தொழிற்சாலையின் தேயிலை ஏலத்திற்கு முன் வைக்கப்பட்டிருந்த தேயிலை இருப்புகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளின் இரசாயன ஆய்வுக்கூட சோதனைகளின் பிரகாரம் சுக்ரோஸ் மட்டம் அங்கீகரிக்கப்பட்ட அளவினை விட காணப்பட்டதாக 2020 நவம்பர் 30 ஆம் திகதி தேயிலை ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | அவ்வாறான நிலைமை ஒன்று இதுவரையிலும் தேயிலை சக்தி நிதியத்திற்கு அறிக்கையிடப்பட்டிராமையால் அதனுடன் இணங்குவதற்கோ அல்லது இணங்காதிருத்தல் தொடர்பிலோ கருத்தினை வெளியிட முடியாது. எவ்வாறான போதிலும் இந்நிலைமை தொடர்பில் இலங்கை தேயிலை சபையில் | தேயிலை சபையில் வினவி நிலவும் சிக்கல்களை தீர்த்துக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கமைய தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. | கோரி மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ii) | மேலும் 2021 ஜுன் 30 ஆம் திகதி தேயிலை சபையின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சாலை பரிசோதனைகளில் மேற்குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாத காரணத்தால் தொழிற்சாலையின் பதிவினை 2021 ஜுலை 27 ஆம் திகதி இடைநிறுத்தியிருந்தது. அதற்கமைய அத்திகதியின் பின்னர் தொழிற்சாலையின் தேயிலை உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தது. தொழிற்சாலையின் அமைவிடத்திற்கு அமைய போக்குவரத்து சிரமங்கள் காரணமாக கொழுந்து விநியோகஸ்தர்களை தொழிற்சாலைக்கு வரவழைப்பதில் நிலவும் சிரமங்கள், சுற்றிலுமுள்ள தொழிற்சாலைகளின் போட்டித்தன்மை மற்றும் தரம் குன்றிய குறைந்த அளவிலான தேயிலை கொழுந்துகளுடன் தொழிற்சாலையை இலாபமான விதத்தில் நடாத்திச் செல்வதில் சிரமங்கள் காணப்படுவதால் 2021 டிசம்பர் 15 ஆம் திகதி முதல் கொழுந்துகளை பெற்றுக் கொள்ளுதல் நிறுத்தப்பட்டிருந்தது. பசர மற்றும் கெப்பட்டிபொல ஆகிய இரு தேயிலை சக்தி தொழிற்சாலைகளின் முகாமைத்துவமும் இந்த அருண தேயிலை தொழிற்சாலையின் தனியார் கம்பெனியை குத்தகைக்கு பெற்றுக் கொண்டுள்ளதுடன் அந்த இரு தொழிற்சாலைகள் மற்றும் கிலரண்டன் தேயிலை தொழிற்சாலையின் நிராகரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தியை மேற்கொள்ள இந்த மகாவலி தொழிற்சாலையை பயன்படுத்த அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. அதற்கமைய 2022 பெப்ரவரி 01 திகதிய பிரதி தேயிலை ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் இத்தொழிற்சாலை | ஏற்றுக்கொள்கிறேன். | ஏற்றுக்கொள்ள தரத்துடனான தேயிலைக் கொழுந்து உற்பத்திக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிராகரிக்கப்பட்ட தேயிலைத் தொழிற்சாலை ஒன்றாக நடாத்திச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | | |

**(இ) மாரவில தேயிலை தொழிற்சாலை**

2017 ஏப்ரல் 28 ஆம் திகதி மாவரல தேயிலை தொழிற்சாலையின் முகாமைத்துவம் வலஹந்துவ கிறீன் லைன் பர்ஸ்ட் தனியார் கம்பெனிக்கு 10 வருட காலத்திற்காக சாட்டப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் தகவல்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | இந்த தொழிற்சாலை குத்தகைக்கு வழங்கப்பட்ட திகதி முதல் 2022 ஜனவரி 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய மொத்த தவணைப் பணம் ரூபா.23,652,000 தொகையில் தேயிலை சக்தி நிதியத்திற்கு செலுத்தியுள்ள குத்தகை தொகை ரூபா.810,000 ஆக காணப்படுவதுடன் அது மொத்த தொகையில் 3.42 சதவீதம் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | உரிய நிலுவைத் தொகை 2022.10.12 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு இறுதியாக திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செலுத்தமுடியாதுவிடின் மீண்டும் அறிவிக்காது உடன்படிக்கையைச் இரத்து செய்து தொழிற்சாலையை மீள சுவீகரிப்பதற்கும் அனைத்து நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் தற்போது குத்தகையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. | உடன்படிக்கையின் பிரகாரம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து நிலுவைத் குத்தகை பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | இந்த தொழிற்சாலை கிரீன் லைன் பர்ஸ்ட் கம்பெனிக்கு கையளிக்கப்பட்ட திகதி முதல் இதுவரையிலும் நாளாந்தம் தேயிலை உற்பத்தியை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2019 மே மற்றும் ஜுன் மாதங்களுக்காக இந்த தேயிலை தொழிற்சாலைக்கு தேயிலை விநியோகித்த வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய நிலுவை பணம் ரூபா.636,328 ஆக காணப்பட்டது. | கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கைகளின் பிரகாரம் உடன்படிக்கை காலப்பகுதியினுள் தொழிற்சாலை மற்றும் கொழுந்து விநியோகத்திற்காக செலுத்த வேண்டிய பணம் குத்தகை முகாமைத்துவக்கொள்வனவாளரினால் செலுத்தவேண்டியதுடன் உடன்படிக்கையைச் இரத்துச் செய்து நிலுவைப்பணத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் | கொழுந்து விநியோகஸ்தர்களின் நிலுவைப்பணத்தை வழங்குவதற்கு தலையிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் உரிய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (iii) | 03 வருடங்களாக தேயிலை உற்பத்தி தோல்வியடைந்தமைக்கு தேயிலை தொழிற்சாலையில் காணப்பட்ட காலங்கடந்த இயந்திரங்கள் மற்றும் உரிய முறையில் செயற்படாத விறகு அடுப்புகள் ஆகியவற்றால் பூர்த்தி தேயிலையை உற்பத்தி செய்ய முடியாதிருந்தமையால் மாதத்தவணை பணத்தை செலுத்துதல் சிரமமாக காணப்பட்டதாக குத்தகைக்கு எடுத்த தரப்பினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வங்கியின் மூலம் கடன் நிவாரணங்களை பெற்றுக் கொள்ள முடியும் என மற்றும் அந்நிய செலாவணி வங்கியின் ஊடாக வணிகத்தில் முதலீடு செய்ய இயலும் என குத்தகைக்கு எடுத்த தரப்பினர் எதிர்பார்த்து இருந்த போதிலும் அக்கடனை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையால் நிதி இடர்பாடுகள் ஏற்பட்டதாகவும் அதனால் குத்தகைப்பணம் தொடர்பில் நிவாரணம் ஒன்றை எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | தொழிற்சாலையை குத்தகை சாட்டுதல் செய்யும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நிலைமை தொடர்பில் பரிசோதித்து குத்தகையாளரால் தொழிற்சாலைக்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்து விலைக்கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு குத்தகையாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற் கொள்ளமுடியாது. | உடன்படிக்கைக்கமைய செயற்பட்டு குத்தகையாளரின் நிலுவைக் குத்தகை பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஈ)** **மாரவில வத்த**

| | | | |
|---|---|---|---|
| (i) | வலஹன்துவ கிரீன் லைன் பர்ஸ்ட் தனியார் கம்பெனியினால் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த இந்த குத்தகை ஆதனம் தொடர்பில் 2022 ஏப்ரல் 30 ஆம் திகதியில் உள்ளபடியாக குத்தகையாளரால் செலுத்தப்பட்டுள்ள தொகை, மொத்த குத்தகை தொகையில் 52 சதவீதமாக காணப்படுவதுடன் தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவைப் பணம் ரூபா.10,300,000 ஆக காணப்பட்டது. | குறித்த நிலுவைத்தொகை 2022.10.12 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு இறுதியாக திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செலுத்துவதற்கு தவறினால் மீள அறிவிக்காது உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டு தோட்டத்தினை சுவீகரிப்பதற்கும் மற்றும் அனைத்து நிலுவைப்பணத்தையும் அறவிடுவதற்கும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தற்போது | உடன்படிக்கையின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுத்து நிலுவை குத்தகை பணத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குத்தகையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | |
| (ii) | தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமான 100 ஏக்கர் பரப்பளவான காணியுடனான இந்த நிலப்பரப்பில் 42 ஏக்கர்கள் தேயிலை பயிற்செய்கையாக காணப்படுவதுடன் தேயிலை நாற்றுமேடை ஒன்றையும் கொண்டுள்ளது. அவ்வாறே உடன்படிக்கையின் 19 ஆவது பிரிவின் பிரகாரம் இந்த நிலத்தில் தேயிலை நாற்று மேடைகள் இரண்டை பராமரித்து செல்ல வேண்டியதுடன் சிறு தேயிலை தோட்ட சுற்றுலா அதிகார சபையினால் நடாத்தப்படும் தேயிலை நாற்றுமேடையையும் அவ்வாறே பேணுவதற்கும் மற்றுமொரு நாற்றுமேடை குத்தகையாளரால் பேணிச் செல்வதற்கும் தற்போதுள்ள தாய் செய்கையினை அவ்வாறே பேணுவதற்கும் குத்தகையாளரால் இணக்கம் காணப்பட்டிருந்தது. குத்தகையாளருடன் இணங்கியுள்ள உடன்படிக்கையின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் குத்தகை ஆதனத்தின் ஒரு வருடத்திற்கு 02 ஏக்கர்கள் படியாக 12 ஏக்கர் தேயிலை மீள் பயிற்செய்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தேயிலை கன்றுகளை நடுவதற்கும் குத்தகை தரப்பினர் இணங்கியிருந்தனர். அதற்கமைய கம்பனியினால் அறுவடையை பெற்றுக் கொள்ளும்போது எதிர்பார்த்த அறுவடையை பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததாக 2021 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய தேயிலை சக்தி நிதியத்தின் ஏற்பட்டுள்ள சொத்து முகாமைத்துவம் மற்றும் குத்தகைப் பணத்தை சேகரித்தல் தொடர்பிலான சிக்கல்களை தீர்ப்பதற்கு பரிந்துரைகளை வழங்கும் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவினை விட குறைவான அளவில் குத்தகையாளரால் மீள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் குத்தகையாளரால் உடன்படிக்கையின் பிரகாரம் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை முழுமையாக நிறைவேற்றாமையின் அடிப்படையில் அறுவடை வீழ்ச்சி அடைந்திருந்தது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய அவரின் கோரிக்கையின் அடிப்படையில் குத்தகை சலுகைகளை வழங்குவதற்கு இணங்காததுடன் மேற்படி (அ) மூலம் குறிப்பிட்டுள்ளவாறு நிலுவைப் பணத்தை செலுத்துவதற்கு குத்தகையாளர் தவறினால் குறித்த பணத்தை அறவிடுதல் மற்றும் மேலதிக சட்டநடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றேன். | உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கமைய தேயிலை கன்று நாற்றுமேடை மற்றும் தேயிலை தோட்டத்தை சிறந்த முறையில் பராமரித்து செல்லும் வகையில் குத்தகையாளருக்கு அறிவுறுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2017 ஏப்ரல் 28 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் (I) ஆம் பிரிவின் பிரகாரம் 2027 ஏப்ரல் 27 ஆம் திகதி வரையிலும் 05 வருட காலப்பகுதிக்கு மீளாய்வு செய்வதற்கு உள்ளடங்கலாக 10 வருட குத்தகை கால பகுதியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. எவ்வாறான போதிலும் இந்த ஆதன குத்தகை கையளிக்கப்பட்டு 4 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இந்த தோட்டத்தில் 100 ஏக்கர் பரப்பளவனுள் எல்லைகள் உரியமுறையில் அளவிடப்பட்டு காணிகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்பது 2021 மார்ச் 01 ஆம் திகதிய குத்தகையாளரின் கடிதத்தின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டில் காணி அளவீட்டு பணிகளை மேற்கொள்வதற்காக நில அளவையாளர் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் குறித்த வரைபடத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி ஒன்று நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்காலத்தில் குறித்த சிக்கலை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. | காணிகளை அளவிட்டு ஆதனங்களை உரிய முறையில் குத்தகையாளருக்கு கையளிக்க வேண்டும். |

**(உ) தெனியாய தேயிலை சக்தி தொழிற்சாலை**

வலஹந்துவ கிரீன் லைன் பர்ஸ்ட் தனியார் கம்பெனியினால் குத்தகையாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த இந்த கைத்தொழிற்சாலை தொடர்பில் இலங்கை தேயிலை சபையின் அங்கீகரிக்கப்பட்ட பூர்த்தி தேயிலை இயலுமை மாதாந்தம் 35,000 கிலோகிராம்கள் ஆகும். அதற்கு உரியதாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | 2016 நவம்பர் 17 ஆம் திகதி முதல் 2026 நவம்பர் 16 ஆம் திகதி வரையிலுமான 10 வருட காலத்திற்காக குத்தகையாளரால் இந்த கைத்தொழிற்சாலை குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் 30 ஆம் திகதி மொத்தத் குத்தகையில் இருந்து செலுத்தப்பட்டுள்ள குத்தகை தொகை 37 சதவீதம் ஆகும். அதற்கமைய அத் திகதியில் உள்ளபடியான நிலுவைத் குத்தகை தவணை ரூபா.24,187,837 ஆக காணப்பட்டது. | உரிய நிலுவைத்தொகை 2022.10.12 ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்துமாறு இறுதித் திகதி இறுதியாக திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செலுத்தத் தவறினால் மீண்டும் அறிவிக்காது உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டு தொழிற்சாலையை மீள சுவீகரிப்பதற்கு மற்றும் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இதுவரையிலும் குத்தகையாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. | உடன்படிக்கையின் பிரகாரம் சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களின் நிலுவை குத்தகை தொகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இலங்கை தேயிலை சபையின் தகவல்களுக்கு அமைய தெனியாய தேயிலை சக்தி கைத்தொழிற்சாலையின் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தேயிலை உற்பத்தி மற்றும் தேயிலை கொழுந்தினை பெற்றுக்கொள்ளும் தேயிலை சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் மாதாந்த பூர்த்தி இயலளவு மற்றும் கொழுந்து இயலளவு ஆகியவற்றை விஞ்சி இருந்த மாதங்களும் காணப்பட்டதுடன் தெனியாய தேயிலை தொழிற்சாலையில் 2021 ஆம் ஆண்டிற்காகவும் பதிவு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் தெனியாய தேயிலை தொழிற்சாலையை சுற்றிலும் போட்டித் தன்மை வாய்ந்த தொழிற்சாலைகள் காணப்படுகின்றமையால் போட்டி அடிப்படையிலான விலைகளின் கீழ் பச்சை தேயிலை கொழுந்துகளை பெற்றுக் கொள்ள நேர்ந்தமை, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் காலாவதியாகி உள்ளமை மற்றும் அவற்றின் செயற்திறன் குறைவடைந்துள்ளமை ஆகியவற்றால் பராமரிப்பு கிரயம் அதிகரித்தமை, அதனால் உரிய நியமத்துடனான உற்பத்தியை மேற்கொள்ள முடியாதிருந்தமையால் தேயிலை சந்தையின் உரிய விலை ஒன்றினை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களை குறிப்பிட்டு குத்தகையாளரால் மாதாந்த குத்தகைத் தொகையை உரிய முறையில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குத்தகையாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கு விலைக்கேள்வி நடைமுறையின் பிரகாரம் முன்மொழிவுகளை கோரும் போது குறித்த தொழிற்சாலையின் தரம் பரிசோதிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் குத்தகையாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதற்கமைய தொழிற்சாலையின் தேயிலை உற்பத்தி முகாமைத்துவ பொறுப்பானது குத்தகையாளரை சாருவதுடன் குத்தகை தவணைகளை செலுத்த தவறியமைக்கு முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் நியாயமற்றது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் நிலுவைத் தொகையை செலுத்த தவறினால் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | நிலுவை குத்தகை தொகை தாமதமின்றி அறவிடப்படவேண்டும். |

**(ஊ) பலாங்கொடை தேயிலை தொழிற்சாலை**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2017 ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி முதல் 10 வருடங்கள் வரையான காலம் இந்த தொழிற்சாலை குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் தேயிலை உற்பத்தி மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டியதாக காணப்பட்டது. 2020 ஜூன் 09 ஆம் திகதி சிறந்த உற்பத்தி | குறித்த நிலைமையை சீராக்கி தற்போது இலங்கை தேயிலை சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் தேயிலை உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | கட்டிடங்களை உரிய முறையில் பராமரித்து சிறந்த உற்பத்தி நடைமுறைகளுக்கு இணங்க தொழிற்சாலையை நடாத்திச் செல்வது தொடர்பில் |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறைகளை பின்பற்றுதல் தொடர்பிலான இலங்கை தேயிலைச்சபையின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) பெறுமதி 47 சதவீதமாக காணப்பட்டது. தொழிற்சாலையின் கட்டிடத்தின் கூரை மற்றும் உட்புற கூரைகள் இற்றுப்போனவாறு மழைநீர் கசிவடைந்தவாறு காணப்பட்டமை கட்டிடத்தின் ஜன்னல் கதவுகள் துருப்பிடித்திருந்தமை, உலர்த்தும் பிரிவில் பறவைகள் வருகையால் அசுத்துமாகியுள்ளமை, நீர் ஆவியாகி தேயிலையால் ஈர்க்கப்படுவதால் தரம் குறைவடைதல், உலர்த்தும் பிரிவு இற்றுப்போயிருத்தல், தொழிற்சாலையின் தரை சிதைவடைந்து காணப்படுவதால் தரையில் பூர்த்தி தேயிலையை குவித்து வைப்பதால் மணல் மற்றும் கழிவுகள் தேயிலையுடன் கலத்தல், பச்சை தேயிலை கொழுந்துகளை கொண்டு செல்வதில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் இதன் போது கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த விடயங்களின் அடிப்படையில் தொழிற்சாலையின் உற்பத்தி 2021 ஜூலை 27 ஆம் திகதி முதல் இடை நிறுத்தப்பட்டிருந்தது. | | குத்தகையாளருக்கு அறிவிக்கவேண்டும். |
| (ii) | 2021 ஆம் ஆண்டுக்காக ரூபா.360,000 ஆன குத்தகைத் தொகை தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. | மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த 04 மாத காலப்பகுதியினுள் தவணை பணங்களை செலுத்தாதிருப்பின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்த பின்னர் இதுவரையிலும் உரியமுறையில் தவணைகள் செலுத்தப்பட்டவாறு உள்ளன.<br><br>குறித்த தொழிற்சாலை கட்டிடத்தில் மாத்திரம் முகாமைத்துவ கொள்வனவாளருக்கு நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அனைத்து இயந்திர | உடன்படிக்கைக்கமைய செயற்பட்டு நிலுவைப் பணத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

உபகரணங்களின் முகாமைத்துவம் கொள்வனவாளரால் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய தொழிற்சாலைக்கு பாரிய தொகை ஒன்று அவரால் முதலீடு செய்யப்பட்டிருந்தமை மற்றும் உற்பத்தி மேற்கொள்ளப்படும் காலப்பகுதியினுள் உடன்படிக்கையின் பிரகாரம் உரிய முறையில் தவணை செலுத்தியமை போன்ற விடயங்களை கருத்திற்கொண்டு உரிய நிலுவைத் தொகையானது சமனான 06 தவணைகளில் செலுத்துவதற்கு சலுகைக் காலம் ஒன்று தற்போது முகாமைத்துவ கொள்வனவாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(எ) கினிமலை தேயிலை சக்தி தொழிற்சாலை**

2016 நவம்பர் 24 ஆம் திகதி இரத்தினபுரி பிரதேசத்தின் தனியார் கொள்வனவாளர் ஒருவருக்கு இந்த தொழிற்சாலையின் முகாமைத்துவம் 10 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2022 மார்ச் 01 ஆம் திகதியில் உள்ள படியாக தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய தவணை பணம் ரூபா.9,775,500 ஆக காணப்பட்டதுடன் தவணை பணம் மற்றும் நிலுவை தவணை ஆகியவற்றுக்கு தாமத கட்டணங்கள் உள்ளடங்கலாக மொத்த தொகை ரூபா.76,973,660 ஆக காணப்பட்டது. இந்த குத்தகையாளரால் 2020 ஜனவரி மாதம் முதல் 2022 மார்ச் 01 ஆம் திகதி வரையிலும் எந்த தொகையும் தேயிலை சக்தி நிதியத்திற்கு செலுத்தியிருக்கவில்லை.

உரிய நிலுவைத்தொகை 2022.10.12 ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்துமாறு இறுதித் திகதி இறுதியாக திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செலுத்தத் தவறினால் மீண்டும் அறிவிக்காது உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டு தொழிற்சாலையை மீள சுவீகரிப்பதற்கு மற்றும் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இதுவரையிலும் குத்தகையாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட

உடன்படிக்கையின் பிரகாரம் சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களின் நிலுவை குத்தகை தொகை அறவிடப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளன. | |
| (ii) | தொழிற்சாலையின் பணிகளை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு குத்தகையாளரால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை தேயிலை சபையினால் இந்த தொழிற்சாலையின் தேயிலை உற்பத்தி பணிகள் உரிய தரத்தில் மேற்கொள்ளாமை மற்றும் உற்பத்தியில் செயற்கையாக பிரக்ரோஸ் (Fructoce) எனும் பெயருடைய தடைசெய்யப்பட்ட சீனி வகை ஒன்று சேர்க்கப்பட்டிருந்தமையால் 2021 நவம்பர் 30 ஆம் திகதி முதல் 2022 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் தேயிலை உற்பத்தி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே இத் தொழிற்சாலையினால் தேயிலை ஏலத்திற்கு முன்வைக்கப்பட்ட தேயிலை இருப்பு தேயிலைச்சபையின் இரசாயன ஆய்வுக்கூட பரிசோதனையில் அந்த தேயிலையில் தாழ்நில அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியை விஞ்சி பிரக்ரோஸ் என்னும் பெயருடைய சீனி வகை அடங்கியுள்ளதாக 2022 ஜூன் 27 ஆம் திகதிய பிரதி தேயிலை ஆணையாளரின் கடிதத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | குத்தகை எடுத்த தரப்பினரால் மேற்கொள்ளப்படும் உற்பத்திகள் அரச நிறுவனத்தினால் விதிகள் மீறப்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் இணக்கம் காணப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் குறித்த தொழிற்சாலையின் குத்தகையாளரினால் உடன்படிக்கையின் நிபந்தனைகள் தொடர்ச்சியாக மீறப்படுவதாக அவதானிக்கப்பட்டமையால், (அ) மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. | உடன்படிக்கையின் 10 ஆம் பிரிவிற்கு முரணாக சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதால் தொழிற்சாலையை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | கினிமலை தேயிலை சக்தி நிதியத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 05 வருட காலப்பகுதியினுள் கொழுந்து விநியோகத்தருக்கு செலுத்த வேண்டிய நிலுவை கொழுந்து பணம் ரூபா.59,234,288 ஆக காணப்பட்டது. | குத்தகை எடுத்த தரப்பினரால் மேற்கொள்ளப்படும் உற்பத்திகள் அரச நிறுவனத்தினால் விதிகள் மீறப்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் இணக்கம் காணப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் குறித்த தொழிற்சாலையின் குத்தகையாளரினால் உடன்படிக்கையின் நிபந்தனைகள் தொடர்ச்சியாக மீறப்படுவதாக அவதானிக்கப்பட்டமையால், (அ) மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு | கொழுந்து விநியோகத்தரின் நிலுவைப் பணத்தை வழங்குதல் தொடர்பில் தலையீடு மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. | |
| (iv) | 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி தொழிற்சாலைப் பொருட்கள் தொடர்பில் இரத்தினபுரி பிரேதச அபிவிருத்தி அதிகாரி மற்றும் தேயிலை சக்தி நிதியத்தின் நிர்வாக அதிகாரிகள் இருவருக்கு நடத்திய விசாரணையில், குத்தகையாளரின் கோரிக்கையின் அடிப்படையில் கேப்பெட்டிப்பொல் தொழிற்சாலையிலிருந்து வழங்கப்பட்டிருந்த உலர்த்தும் இயந்திரம் (Drier) தொழிற்சாலையிலிருந்து வெளியேறிய கழற்றி வைக்கப்பட்டிருந்தமை மற்றும் தொழிற்சாலை பிரதேசம் உரிய முறையில் பராமரிக்கப்படாமை, குறித்த காணியின் எல்லைகள் தொடர்பான சிக்கல்கள் உருவாகியிருந்த காரணத்தால் தேயிலை சகத்தி நிதியத்தின் நிலையான சொத்துக்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல் பாதுகாக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய இயந்திரத்தை நிறுவுமாறு குத்தகையாளருக்கு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் பாதுகாக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஏ) எல்பிட்டிய தேயிலை சக்தி தொழிற்சாலை**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2021 மார்ச் 22 ஆந் திகதி புதுரலிய உதவி தேயிலை ஆணையாளரின் உள்ளக குறிப்பின் பிரகாரம், அந்த தொழிற்சாலை 2019 ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்கப்படாத, அனுமதிப்பத்திரமற்ற வியாபாரிகளிடமிருந்து கொழுந்தினை பெற்றுக்கொள்வதாக, அது தேயிலை ஆணையாளரின் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணானது என்பதால் ரூபா.10,000 ஆன தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தது. தேயிலை சக்தி நிதியம் இது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பான நிலைமை இதுவரை தேயிலை சக்தி நிதியத்திற்கு தெரிவிக்கப்படவில்லை எனவும், எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன். எவ்வாறாயினும், அரசாங்க நிறுவனத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மீறாத வகையில் தேயிலை உற்பத்தி செய்யப்பட வேண்டும் என குத்தகைக்கு எடுத்த தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது. | அங்கீகரிக்கப்படாத விநியோகத்தர்களிடமிருந்து கொழுந்து வாங்க வேண்டாம் என்று குத்தகைதாரருக்குத் தெரிவிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை முகாமைத்துவ கட்டணங்கள் ரூபா.2,150,000 ஆக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2022.10.12 ஆந் திகதிக்கு முன் உரிய நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு இறுதித் தேதி வழங்கப்பட்டுள்ளது, அவ்வாறு செய்யத் தவறினால், தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என முகாமைத்துவ கொள்வனவாளருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | வரி நிலுவையை உடனடியாக வசூலிக்க வேண்டும். |

**(ஐ) ரயிகம் கோரளை தேயிலை சக்தி தொழிற்சாலை**

ரயிகம் கோரளை தேயிலை சக்தி தொழிற்சாலையின் முகாமைத்துவம் 2016 யூன் 10 ஆந் திகதி முதல் 2021 யூன் 10 ஆந் திகதி வரையிலுமான 05 வருடத்திற்கு திக்ஹேன சிறு தேயிலை அபிவிருத்தி நிதியத்திற்க கையளிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | இந்த தொழிற்சாலை சக்தி நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகதியினுள் வெளிவாரித் தரப்பினருக்கு சேலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா.5,593,360 ஆன தொகையை அந்த கொழுந்து உரிமையாளர்களுக்கு செலுத்துவதற்கு மற்றும் ரூபா.250,000 ஆன மாதாந்த குத்தகை தொகையை தேயிலை சக்தி நிதியத்திற்கு செலுத்தவும் இணங்கி, திக்ஹேன சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கத்தினால் இந்த தொழிற்சாலையின் முகாமைத்துவம் குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த உடன்படிக்கைக்கு முரணாக 2018 மே 11 ஆந் திகதி திக்ஹேன சிறு தேயிலை அபிவிருத்தி நிதியத்தினால் எப்பின் பொரெஸ்ட் ஆர்.டீ.எஸ் பிளான்டேஷன் (தனியார்) கம்பனியுடன் புதிய ஒருங்கிணைந்த உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டு அதற்கமைய 2018 | தேயிலை சக்தி நிதியம் சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களின் பொருளாதார அபிவிருத்திக்காக நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாக இருப்பதால், சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் உறுப்பினர்களால் கட்டப்பட்ட திக்ஹேன சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கம் அந்தந்த தொழிற்சாலைகைள நிர்வாகத்திற்கு அதிக வாய்ப்புகளை வழங்கியுள்ளது. எனினும் தொடர்ச்சியான நிர்வாகச் செயலிழப்பு மற்றும் குத்தகை தவணை செலுத்தாத காரணத்தினால் தொழிற்சாலை மீளப்பெற்று ரயிகம் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கத்திடம் வழங்கப்பட்டுள்ளது. | கொழுந்து விநியோகத்தர்களிட மிருந்து நிலுவைத் தொகையை வழங்க தலையிட வேண்டும். ஒப்பந்தத்தின்படி பொறுப்பான தரப்பினரிடமிருந்து நிலுவைக் குத்தகையை வசூலிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்தோபர் 05 ஆந் திகதி தொழிற்சாலையின் தேயிலை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு சுமார் 6 மாத காலம் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (ii) | பிரதி தேயிலை ஆணையாளரின் தகவல்களின் பிரகாரம், திக்ஹேன சிறு தேயிலை அபிவிருத்தி சங்கத்தினால் இந்த தொழிற்சாலை மீண்டும் தேயிலை சக்தி நிதியத்திற்கு சுவீகரித்த போது கொழுந்து உரிமையாளர்களுக்கு தேயிலைக் கொழுந்துக்காக ரூபா.24,259,520 ஆன தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அவ்வாறே, 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா.8,156,640 தொகையான குத்தகை தொகையும் திக்ஹேன சிறு தேயிலைத் தோட்ட சங்கத்திலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. தொழிற்சாலையின் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததுடன், தொழிற்சாலையின் மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொழிற்சாலையில் காணப்படவில்லை என இனங்காணப்பட்டிருந்தது. திக்ஹேன சிறு தேயிலை தோட்ட சங்கம் தேயிலை சகத்தி நிதியத்துடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை இவ்வாறு மீறப்பட்டிருந்ததுடன், தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து பணத்தையும் அறவீடு செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | திக்ஹேன சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கம் மீண்டும் தொழிற்சாலையைக் கையகப்படுத்தும் வரையில் தொழிற்சாலையை குத்தகைக்கு எடுத்து வந்த தேயிலை சக்தி நிதியம் மேற்படி சங்கத்துடன் இணைந்து செயற்பட்டதுடன், நிலுவைத் தொகையை வசூலிக்க மேற்படி சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. அதன்படி, தேயிலை சக்தி நிதியம் ஒப்பந்தத்தின் கீழ் வேறு எந்த மூன்றாம் தரப்பு குத்தகைதாரருடனும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. | வழங்குநரின் நிலுவைத் தொகையை வழங்குவதில் தலையிட வேண்டும். உடன்படிக்கையின்படி சட்ட நடவடிக்கை எடுத்து பொறுப்புள்ள தரப்பினரிடமிருந்து நிலுவை குத்தகையை வசூலிக்க வேண்டும். |
| (iii) | மீண்டும் 2021 சனவரி 20 ஆந் திகதி முதல் 2031 சனவரி 19 ஆந் திகதி வரையிலுமான 10 வருட காலப்பகுதிக்கு ரயிகம் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கத்தினால் ரயிகம் கோரளே தேயிலை தொழிற்சாலையில் முகாமைத்துவத்தை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், | இதுவரையிலும் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை 2022.10.12 ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்துமாறு இறுதித் திகதி இறுதியாக திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செலுத்தத் தவறினால் மீண்டும் அறிவிக்காது உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டு தொழிற்சாலையை மீள சுவீகரிப்பதற்கு மற்றும் | உடன்படிக்கையின் பிரகாரம் சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களின் நிலுவை குத்தகை தொகை அறவிடப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மாதமொன்றுக்கு ரூபா.600,000 படியாக முகாமைத்துவ கட்டணம் செலுத்துவதற்கும், திக்ஹேன சங்கத்திலிருந்து தேயிலைக் கொழுந்து வழங்கிய தர்ப்பினருக்கு செலுத்த வேண்டிய ரூபா.23,302,826 ஆன தொகை அந்த தர்ப்பினருக்கு செலுத்துவதற்கு ரயிகம் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கம் இணங்கியிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இந்த சங்கத்திலிருந்து தேயிலை சக்தி நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய குத்தகை தொகை ரூபா.3,600,000 ஆக காணப்பட்டதுடன், மேற்படி நிலுவை தேயிலைக் கொழுந்து பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இதுவரையிலும் குத்தகையாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை சக்தி நிதியத்தின் நில எல்லைகள் சரியாக அடையாளம் காணப்பட்டு அளவிடப்படவில்லை மற்றும் அந்த நிலங்களில் சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களை குடியமர்த்துவதற்கு சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருப்பதால் நிதிக்கு கூடுதல் செலவின சுமை ஏற்பட்டுள்ளமை. | தேயிலை சக்தி நிதியத்தைச் சேர்ந்த வெளி தரப்பினர் அனுபவித்து வரும் நிலத்தின் பகுதிகளைத் தீர்ப்பதற்குத் தேவையான வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர் மற்றும் பிற நிலங்களின் எல்லைகளைத் தீர்ப்பதற்கான நோக்கத்திற்காக நில அளவையாளர் திணைக்களத்தின் உதவியுடன் மீள அளவீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வழக்குகள் குறைக்கப்படும் வகையில் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மஹாவலி தேயிலை சக்தி தேயிலை தொழிற்சாலைக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதியை அனுமதியின்றி கையகப்படுத்தியமை மற்றும் பலாங்கொடை தேயிலை சக்தி தேயிலை தொழிற்சாலைக்கு சொந்தமான 5.41 பேர்ச்சஸ் காணியில் நபர் ஒருவரால் கேரேஜ் ஒன்றை நிர்மாணித்தமை தொடர்பில் நிதியினால் ஒருவருக்கு எதிராக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. | ஏற்றுக்கொள்கின்றேன். | வழக்கு நடவடிக்கைகள் துரிதமாக நிறைவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தேயிலை சக்தி நிதியத்தால் தொடங்கப்பட்ட செயலற்ற தொழிற்சாலைகளை செயல்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ், அதிகபட்ச வரம்பு ரூபா.07 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டிருந்ததுடன், குறித்த ஒப்பந்த காலம் முடிவடைந்ததன் பின்னர், தேயிலை சக்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை அறிவிடுவதற்கு 05 தேயிலை தொழிற்சாலைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. | சம்பந்தப்பட்ட திட்டத்தின் கீழ், கடன் நிலுவையில் உள்ள அனைத்து நிர்வாக தொழிற்சாலைகள் மீதும் வழக்குகள் தொடரப்பட்டு உள்ளதுடன், சில தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை நீதிமன்ற தீர்ப்புகளால் வசூலிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழக்குகள் குறைக்கப்படும் வகையில் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தொழிற்சாலைகளை குத்தகைக்கு விடுவதன் மூலம் பெறப்பட்ட வருமானத்தில் பங்குதாரர்களுக்கு ஈவுத்தொகை வழங்குவது மற்றும் தொழிற்சாலைகளின் செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட ரூபா.135 மில்லியன் தொகையை நலன்புரி காப்பீட்டு நிதியில் இருந்து அந்த நிதிக்கு திருப்பி அனுப்புவது மற்றும் அதன் பிறகு மீதமுள்ள தொகையை வரவு வைப்பது. கூட்டு நிதிக்கு வாடகை வருமானம் தேயிலை சக்தி நிதியத்தை மறுசீரமைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், தொழிற்சாலை குத்தகை வருமானம் எதிர்பார்த்தபடி கிடைக்காததால், நிதி நிறுவப்பட்டு 5 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், அதன் இலக்குகளை அடைய முடியவில்லை. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக, தேயிலை சக்தி நிதியத்தின் சொத்துகளின் நிர்வாகம் மற்றும் குத்தகையின் மதிப்பு ரூபா.165,806,868 ஆன வாடகை வருமானம் கிடைத்தது, ஆனால் ரூபா.135 மில்லியன் தொகையில் நலன்புரி காப்பீடு தொடர எந்த நடைமுறையும் அறிமுகப்படுத்தப்படவில்லை. | தற்போது நலன்புரி காப்புறுதி நிதியின் 135 மில்லியன் பெறுமதியான பணம் தேயிலை சக்தி நிதியம் என்ற பெயரில் நிலையான வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தேயிலை சக்தி உறுப்பினர்களின் குழு ஆயுள் காப்பீட்டை பராமரிக்க தேவையான ஏற்பாடுகளுக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட நிதியத்தின் நிதியின் பணத்தை பயன்படுத்தும். | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம், நிதியத்தினை மீள்கட்டமைக்கும் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தை மீள் கட்டமைப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 2016 ஜுலை 13 திகதிய அமப/16/1224/726/015-I இலக்கம் கொண்ட அமைச்சரவை | குறித்த நிறுவனங்களில் நிலவிய வெற்றிடங்களின் அடிப்படையில் உரிய ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டுள்ளதுடன், அது | வெளிவாரி நிறுவனம் ஒன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த |

| | | |
|---|---|---|
| தீர்மானத்தின் படி நிதி அமைச்சரின் அவதானிப்புகளில் காட்டப்பட்டுள்ளவாறு நிரந்தர பதவியணியினரை அமைச்சின் கீழ் வைக்கப்பட்டு ஏனைய நிறுவனங்களுக்கு இணைக்கும் போது குறிப்பிட்ட நிறுவனத்தின் விருப்பத்தின் மீது மற்றும் பதவியணிச் சம்பளம் வேதனங்கள் அந் நிறுவனங்களில் காணப்படும் பாதீட்டு ஏற்பாடுகள் மீது செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br><br>அவ்வாறான போதிலும், மூன்று முகாமைத்துவம் உதவி உத்தியோகத்தர்கள் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கும், சாரதி ஒருவர் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கும், விடுவிக்கப்பட்டு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது அந்த உத்தியோகத்தர்களுக்கான சம்பளமாக ரூபா.1,459,614 தொகை மற்றும் ரூபா.1,822,298 தொகையும் இந்த நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல் 2020 ஆண்டின் போதும் மேற்கூறிய முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர் இருவர் மற்றும் சாரதி ஒருவருக்காக ரூபா.1,587,324 தொகை மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா.1,715,940 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | தொடர்பில் எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகளுக்குரிய ஆரம்ப பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சம்பளம் மீளளிப்புச் பெற்றுக்கொள்ள வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேயிலை சக்தி நிதியத்திற்கு எதிராக வெளிவாரித் தரப்பினரால் உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்று மற்றும் தொழில் நியாய சபைகளில் 33 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கின்றேன். | பதவியணியின் சேவையை முடிவுறுத்தும் போது சுற்றறிக்கை மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |